other allowances are paid by the Council. The Council has also lent a large quantity of books and certain equipment to the Campaign.

*533 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது, ஐந்தாவது வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்கும் முறை கற்றுத்தர நடத்தப்பெறும் **Madras English Language Teaching Campaign Course** வகுப்புக்களுக்கான ஜூனியர் ஆபீசர்களையும் பாடம் நடத்தத் தகுதியான ஆசிரியர்களையும் தேர்ந்தெடுப்பது யார்?

(இ) எந்த அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Junior Officers of the Madras English Language Teaching Campaign were selected by the Senior Officers of the Campaign, including the Education Officer of the British Council and the Deputy Director of Public Instruction (Training), with the assistance of other persons where found necessary. The tutors for the Secondary courses of the Campaign are graduate teachers from local schools selected by the District Educational Officers.

(b) The selection was made on the basis of suitability for the special type of work involved in the Campaign and with reference to previous experience in teaching English.

தற்கொலைகள்

*534 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழ்நாட்டில் 1961-62, 1962-63-ல் தற்கொலை செய்து கொண் டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக?

THE HON. SRI P. KAKKAN: A statement[a] is placed on the table of the House.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த தற்கொலை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 1961-ம் ஆண்டில் மொத்தம் 3,164 என்றும், 1962-ம் ஆண்டில் 3,095 என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1963-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் வரை யில் 6 மாதத்திற்கு 1,626 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் 6 மாத காலத்திற்கு எவ்வளவு தற்கொலைகள் எதிர்பார்க் கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மந்திரி, ஜோஸ்யம் தெரிந்த மந்திரி அல்ல. எவ்வளவு தற்கொலை கள் ஆகும் என்று சொல்ல முடியாது. ஆனால் தற்கொலைகளே ஆகக் கூடாது என்று தான் வேண்டிக்கொள்கிறேன்.

---

[a] Printed as Appendix VII on pages 799–800 infra.

23rd November 1963]

திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்கொலைகளுக்கு என்ன காரணங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? எது அதிகமான காரணமாக இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : சிலர் கடன்பட்டவர்கள்; நோயின் காரணமாகவும் இருக்கிறது; தீர்க்கப்படாத வியாதி காரணமாகவும் இருக்கிறது; ஃப்ரஸ்ட்ரேஷன் இன் லவ்; அதாவது காதல் காரணமாகவும் இருக்கின்றன. இந்த மாதிரி காரணங்களினால் தற்கொலைகள் நடைபெறுகின்றன.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : ஸார், கொடுக்கப்பட்ட தகவலில் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. ஒரு ஜில்லாவில் 300 அல்லது 400 என்று இருக்கிறது. இன்னொரு ஜில்லாவில் குறைவாக இருக்கிறது. மதுரை அர்பன், மதுரை நார்த் இரண்டையும் சேர்ந்தால் 400-க்கு மேல் போகிறது. எங்கள் ராமநாதபுரம் ஜில்லாவில் 50 தான் இருக்கிறது. இவ்வளவு ஜில்லாவுக்கு ஜில்லா வேரியேஷன் இருக்கக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியாது. இருந்தாலும் இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : இந்த தற்கொலைகளில் பெரும்பாலானவை மூட்டைப்பூச்சி மருந்தினால் ஏற்படுவதாகத் தெரிகிறது. மூட்டைப் பூச்சி மருந்தினால் மூட்டைப்பூச்சிகள் இறப்பதை விட அதிகமாக மனிதர்கள் இறக்கின்ற காரணத்தினால், இதைத் தடை செய்யவோ அல்லது லெதால் டோஸாக இல்லாமல் குறைக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : மூட்டைப் பூச்சி மருந்தை பத்திரமாக உபயோகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. மூட்டைப் பூச்சி அதிகமாக இருக்கிறது, மனிதர்களுக்கு தொந்தரவாக இருக்கிறது என்று அதற்கு ஒரு மருந்து கண்டுபிடித்தோம். அதையே மக்கள் உண்டு இறப்பது என்றால், அம்மாதிரி இறக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்கள்தான்.

திரு. கரு. சீமைச்சாமி : தற்கொலைகள் வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேல் நாடுகளில் தற்கொலைகள் இதைவிட அதிகமாக இருக்கின்றன. முதன்மையாக இருக்கக் கூடிய சில நாடுகளில் கூட தற்கொலைகள் அதிகமாக இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மாத்திரம் தற்கொலைகள் நிகழ்கின்றன என்று சொல்லுவதற்கில்லை.

திரு. சா. கணேசன் : பத்திரிகைகளில் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி வரும்போது, மூட்டைப் பூச்சி மருந்து தின்றார், அதைத் தின்றார், இதைத் தின்றார் என்று விளக்கம்

[23rd November 1963

கொடுப்பது அவ்வாறு எண்ணம் இருப்பவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கொடுப்பது போன்று இருப்பதால் இந்த முறையைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : சில பத்திரிகைகள், பத்திரிகை விற்க வேண்டுமென்று போடுகிறுர்கள். அவ்வாறு போடாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

மெட்ரிக் எடைமுறை

* 535 **கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா---

மெட்ரிக் எடையை அறிமுகப்படுத்தும் வகையில் ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : The expenditure on the introduction of metric weights and measures in this State up to the end of March 1963 was rupees twenty lakhs, forty nine thousand (Rs. 20,49,000).

Sanitary Inspectors

* 536 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to entrust the works of the Sanitary Inspectors of Town Panchayats to the Health Inspectors of Panchayat Union Councils in their respective areas?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

ஏரிகள் பராமரிப்பு

* 537 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா--

தற்போது பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இருந்து வரும் ஏரிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து அதன் பராமரிப்புக்கான நிதியையும் பஞ்சாயத்து யூனியன் களிடம் கொடுப்பதற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

பாசன வாய்க்கால் (திருத்துறைப்பூண்டி)

* 538 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருத்துறைப்பூண்டியிலிருந்து நேர் கிழக்கே போகும் (சேகல்மடபுரம், மகராஜபுரம் வழியாக) போக்கு வாய்க்காலைப் பிரித்து, ஈரவாய்க்காலில் தண்ணீரை வடியவிடும் உத்தேச முண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No. Sir.